பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

CONNEMARA PUBLIC LIBRARY
7 - AUG 1956
MADRAS

—: o :—

"முயற்சி திருவினை யாக்கும்"

தொகுதி 19 | ஜய ஸ்ரீ கார்த்திகை, மார்கழி மீ 1954 நவம்பர், டிசம்பர் | பகுதி 8 & 9

பொருளடக்கம்

		பக்கம்
1.	மௌன வாசிப்பு—2 V. நடராஜன்	... 107
2.	கணக்கு: கற்பித்தல்—கூட்டல், கழித்தல் T. S. ராஜகோபாலன், B.A., L.T.	... 114
3.	ஆதாரக் கல்வியில் புத்தகங்கள் சுந்தரராஜ் ஜேம்ஸ், B.A., L.T.	... 118
4.	செய்தித் திரட்டு	... 122
5.	பொங்கல் வாழ்த்து மாயூரம் கோ. ப. வேலன்	... 125

1357
1-11

MEMBERS OF THE JOURNAL COMMITTEE

Sri S. NATARAJAN
" R. KRISHNAMURTHY
" K. KURUVILA JACOB
" T. P. SRINIVASAVARADAN
" V. NATARAJAN
" V. ARUNAJATAI
" L. MARIAPRAGASAM
Sri S. MARIA JOSEPH
" J. VAIDYANATHAN
" G. SRINIVASACHARI
" C. RANGANATHA AIYENGAR, *Secretary*
" V. B. MURTHI, *Asst. Secretary.*

உள் நாடு: வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதி ரூ. 0—4—0

பாலர் கல்வி

தொகுதி 19 | ஜய ஹு கார்த்திகை, மார்கழி மீ 1954 நவம்பர், டிசம்பர் | பகுதி 8 & 9

மௌன வாசிப்பு—2

V. நடராஜன்

வாசிப்புப் பகுதிகள்

மௌன வாசிப்புத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற வேண்டுமாயின், அந்தந்த வகுப்பு வாசிப்புக்கேற்றபடி முறையாக வகுத்து ரகப்படுத்தப்பட்ட வாசகப் பகுதிகள் வேண்டும். சிறப்பாக தயாரிக்கப்பட்ட பகுதிகள் இருந்தால் கஷ்டமில்லை. இல்லையேல் உபவாசகப் புத்தகங்கள், கதைப் பகுதிகள் (மாத, வார, சஞ்சிகைகளிலிருந்து பொறுக்கி எடுத்துப் பிரித்துத் தைத்து வைத்துக்கொள்ளலாம்) இவைகளை உபயோகப்படுத்த வேண்டும். இவைகளில் பற்பல புதிய சொற்கள் இருக்குமாதலின், பொதுக் கருத்து கிரகித்தல் சிரமப்படும்.

புதிய சொற்கள் :

வாசிப்புக்குத் தரும் பகுதிகளை முன்னதாகவே கவனிப்பது அவசியம். ஆசிரியரே தயார் செய்தால் புதிய சொற்கள் அதிகம் இராமல் செய்யலாம். ஆனால் புதிய சொற்களைத் தெரிந்துகொண்டு மாணவர்தம் சொற்களஞ்சியத்தைப் பெருக்க வேண்டியதும் அவசியம்தான். ஏதோ சிற்சில சொற்கள் சில மாணவருக்குப் புதிதாயிருக்கலாம். புதிய சொல்லின் பொருளைத் தனியாக அறிந்துகொள்ளும் அவசியமில்லாமலே வாசகப் பகுதியின பொதுக் கருத்து விளங்கிவிடலாம். கருத்து கிரகிப்பதே மௌன வாசகத்தின் முக்கியமான நோக்கம் ஆதலின் புதிய சொற்களைத் தெரிந்துகொள்ளாவிடினும் பாதகம் இல்லை. புதிய சொற்களை விளக்கவேண்டியது அவசியமென்று கருதினால், ஒவ்வொரு பகுதியிலும் உள்ள புதிய சொற்களை மாத்திரம் மாணவர்கள் வாசிக்கத் தொடங்குமுன் விளக்கிக் கூறலாம். கரும்பலகையில் எழுதி வைக்கலாம். பகுதியின் தொடக்கத்தில் புதுச் சொற்கள் ஜாப்தா எழுதிவைக்கலாம். மாணவர்கள் படிக்கும்போது ஒருவனுக்கு ஏதேனும் ஒரு சொல்லின் பொருள் தெரியவில்லை, அதைத் தெரிந்துகொள்வது அவசியமெனத் தோன்றினால், அவன் உரத்து ஒன்றும் பேசாமல் எழுந்து நிற்பான். அவனருகே சென்று அச் சொல்லை ஆசிரியர் விளக்கிச் சொல்ல வேண்டும். இப்படிச் சொல்வது அவனுக்கு மாத்திரம்தான். மற்ற மாணவர்கள் வாசிப்பு வேகம் குறையாமல் வீணாக இதை கவனிக்காமல் தங்கள் வாசிப்பிலேயே கருத்தாக இருக்கும்படி பார்க்கவேண்டும்

சொல் அகராதி :

சில நாட்கள் இவ்விதம் அனுபவப்பட்ட பிறகு ஒவ்வொரு வகுப்பு ஆசிரியருக்கும் தன் வகுப்பு மாணவருக்குப் புதிதான சொற்கள் எவை என அறிந்து கொள்ள முடியும். இச்சொற்களை ஜாப்தா செய்து, அகரவரிசைப்படுத்தி ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் எழுதிவைப்பது மிகவும் சிறந்தது. இவ்வித நோட்டுப் புத்தகம் ஒரு சிறிய அகராதி போலவே உபயோகப்படும். யாராவது ஒரு மாணவன் ஒரு சொல்லின் பொருள் அறிய விரும்பினால் இந்த அகராதியை (அதாவது ஆசிரியர் எழுதிவைத்துள்ள சொற்கள் ஜாப்தாவை) ஆசிரியர் அவனிடம் கொடுத்து அவனே பொருள் அறிந்துகொள்ளும்படி உதவுவது நல்லது. ஆரம்பத்தில் இவ்வாறு தொடங்கிய பழக்கம், பிறகு நல்ல பலன் தரும். ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு கையெழுத்து அகராதி எப்போதும் தயாராக இருக்கும்.

அச்சிட்ட அகராதிகள் :

அச்சிட்ட அகராதிகளை உபயோகித்துப் பயன்பெறும் பழக்கமும் மாணவர்களுக்கு

அவசியம். 4, 5 வகுப்புக்களிலேயே இந்தப் பழக்கம் வரும்படி செய்வது நல்லது. ஆனால் அவர்களுக்கென சிறிய அகராதிகள் விலைக்குக் கிடைப்பது சிரமப்படும். கிடைக்கும் சில அகராதிகளிலும் மாணவர்களுக்கு அச்சமயத்திற்குத் தேவையில்லாத பற்பல சொற்கள் காணப்படும். இவைகளுக்கிடையே மாணவர் தாம் கோரும் சொற்களைத் தேடுவதும் காலதாமதமாகும். தேடும்போதே இடையே உள்ள சில புதுச் சொற்கள் அவர்கள் கவனத்தை வசிகரித்துவிடும். இவ்வாறு நேரம் போக்குவதால் மௌன வாசிப்புப் பயிற்சி நேரம் அதிகமாகும். பகுதியில் உள்ள பொதுக் கருத்தை அறிந்துகொள்ளும் ஆர்வமும் குறைந்துவிட ஏதுவாகலாம். இவ்விதம் பல இடையூறுகள் ஏற்படுவதை உத்தேசித்தால், மௌன வாசிப்புப் பயிற்சிக்கென சேகரித்துள்ள பகுதிகளை மாத்திரம் பரிசீலனை செய்து அவைகளில் காணப்படும் புதிய சொற்களை அகரவரிசையாக ஜாப்தா செய்து ஒரு கையெழுத்துப் பிரதி அகராதி அழகாக பயிண்டு செய்து உபயோகிப்பது மிகவும் சிறப்பாக இருக்கும்.

மேல் வகுப்புக்களில், சிறப்பாக 7, 8 வகுப்புக்களில் (அல்லது II, III படிவங்களில்) மாணவர்கள் சிறிய அகராதிகளையே, (அச்சுப் புத்தகங்களையே) உபயோகிக்கப் பழக்குவது நல்லது. இதனால் காலதாமதம் ஆகுமென்றாலும், மாணவர்கள் பழக்கம் பெறுவதால் சடுதியாக அகராதிப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்துத் தாம் கோரும் சொற்களுக்குப் பொருள் தெரிந்துகொள்ளும் பண்பு ஏற்பட்டுவிடும்.

வாசிப்புப் பகுதிகளின் அமைப்பு :

வாசிப்புக்கேற்ற பகுதிகளைப் பொறுக்கிரகப்படுத்துவதும் ஆசிரியர்களுக்கு ஒரு வேலையாகும். வசனப்பகுதி ஏதேனும் ஒரு கதையாக இருக்கலாம், அல்லது விஞ்ஞான விஷயமாகவோ, இயற்கைக் காட்சி வருணனையாகவோ இருக்கலாம். முக்கியமாக வசனப்போக்கு லளிதமான நடையில் இருப்பது அவசியம். விஷயம் கவர்ச்சியுள்ளதாகவும் இருக்கவேண்டும். உருசியான கதையென்றால் வாசிப்பில் கவனமும் வேகமும் அதிகம் இருக்கும். ஆகவே இவ்விதப் பகுதிகள் அதிகமாகவும் இதர விஷயப் பகுதிகள் சொற்பமாகவும் இருப்பது நலம்.

வேகம் குறையும் காரணங்கள் :

வாசிப்பில் வேகம் குறையும் காரணங்களையும் கவனிப்போம். கவர்ச்சியுள்ள விஷயமாயின் வேகம் தடைபடாது. விஷயத்தைப் பொறுத்து வேகம் அதிகமாகும் எனினும் இதர காரணங்களும் வேகத்தைப் பாதிக்கும். வாசிக்கும்போது கண் நிறுத்தல்கள் அதிகம் ஏற்படுமாயின் வேகம் குறையும். இவ்வித நிறுத்தல்கள் எப்போது ஏற்படும்? பக்கம் திருப்புதல், விஷய நடுவில் உள்ள படங்களைக் கவனித்தல், அச்சு வரிகளில் பேதங்கள், வரி வெட்டுகள், பத்திப் பிரிவுகள் முதலிய பல காரணங்களினால் கண் நிறுத்தல்கள் ஏற்படும். ஆகவே வாசிப்புக்குத் தரும் பகுதிகளில் இவைகள் குறைவாக இருப்பது உசிதம். ஆசிரியர் தாமே தயாரிக்கும் பகுதிகளில் இவைகள் இல்லாமல் கவனிக்க முடியும். ஆனால் அச்சிட்ட பகுதிகளைப் பொறுக்கும்போது இவைகளைக் கவனித்து அகற்றுவது சிரமப்படலாம். வேகமாக வாசித்து, சுலபமாகக் கருத்து அறிந்துகொள்ள வேண்டுமென்பதே முக்கிய நோக்கமாதலின், ஆரம்பத்தில் தரும் அச்சுப் பகுதிகளில் கண் நிறுத்தல்கள் உண்டாக்கும் இனங்கள் இருக்கக்கூடாது. வாசிப்பதில் உற்சாகம் பெருகிப் பழக்கம் ஏற்பட்ட பிறகு, பத்திரிகைகளில் ஒரோர் பகுதியை மாத்திரம் குறிப்பிட்டு, பயிற்சிக்குத் தரலாம்.

விஷய ஒற்றுமையும் நிறைவும் :

வசனப் பகுதியில் உள்ள விஷயம் வாசிக்கும் நேரத்திற்குள் முடிவு பெறக்கூடிய ஒரு விஷயமாயிருக்கவேண்டும். இடையிலே தொடங்கி இடையிலே முடிக்கும்படி வாசிப்பு அமையாமல், வாசிப்புத் தொடக்கம் முதல் இறுதி வரையில் ஒரே விஷயம் நிறைவாகப் பூரணமாக முடியவேண்டும். வாசிக்கும் விஷயத்திற்குச் சில சமயம் தலைப்பு இல்லாவிடில் பாதகமில்லை. விஷயம் படித்த பிறகு, தலைப்புக் கொடுப்பதையே ஒரு சோதனையாகத் தரலாம். விஷயத்தன்மையையும், சொற்கள் மொத்த அளவையும் கவனித்து வாசிப்பு நேரம் திட்டமிடவேண்டும்.

கண் சோர்வு குறைப்பது :

வாக்கியங்களும் சொல் வரிசைகளும் அமைந்துள்ள பாங்கும் வாசிப்பதற்கு உற்சாகம் தரும். அச்சு எழுத்துக்களின் அழகும், வரிகள் பார்வையும் வசீகரமாயிருந்தால் கண் சோர்வு ஏற்படாமல் வேகம்

தாராளமாக இருக்கும். ஒரு பக்கத்தில் 30 வரிகளும் ஒருவித இடைவெளியுமின்றி இடப்புறமிருந்து வலப்புறம் வரை ஒரே மொத்தையாக இருந்தால் வாசிப்பில் அலுப்பும் கண் சோர்வும் உண்டாகும். ஆங்காங்கு சிற்சில இடைவெளிகள் அவசியமே. பத்திகளின் தொடக்க வரிகள், சற்று தள்ளியே தொடங்குவது இக்காரணம் பற்றியேதான்.

நேர அளவு :

வசனப் பகுதிகளை ரசப்படுத்தும் போதும் விஷயத்திற்கும், நடைக்கும் ஏற்றவாறு, ஒவ்வொரு வகுப்பிற்கும் தராதரம் கவனித்து வாசிப்பு நேரம் குறிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரே பகுதி தரவேண்டுமாயின் 40 அல்லது 50 காப்பிகள் தேவையாகும். தயார் செய்த கையெழுத்துப் பிரதிகளை அச்சிட்டு வைத்துக்கொள்ள வசதி இருந்தால் மிகவும் உத்தமம். ஆரம்ப நிலையில் சுவற்றில் மாட்டும் பெரிய வாசகத்தாள்களை உபயோகிக்கலாம். குறிப்பிட்ட காலவரம்பிற்குள் வாசித்து முடிக்கவேண்டும். காலம் முடிந்தவுடன் வாசகத்தாளைச் சுருட்டி மூடிவிட்டு, சோதனை வினாக்கள் தரவேண்டும். ஆனால் வாசகத்தாள்கள் உபயோகிப்பதைக் காலக்கிரமத்தில் நிறுத்திவிட்டு அச்சுப் புத்தகங்களைப் படிக்கும் பயிற்சியைத் தொடங்கி இந்தப் பழக்கத்தை விருத்தி செய்வது அவசியம். சுவற்றில் மாட்டியிருக்கும் வாசகத்தாள் படிப்பதும், கையில் வைத்துக்கொண்டே வாசகத்தாள் (கையெழுத்துப் பிரதி) படிப்பதும் தொடக்க நிலை, அச்சுப்புத்தகம் படிக்கும் பழக்கம் சீக்கிரம் ஏற்படவேண்டும்.

கிரகித்தல் சோதனை செய்யாவிடில் மௌன வாசிப்பின் பயனை அறிய முடியாது. சோதனைகள் நடத்தும் சங்கடத்தை உத்தேசித்துச் சிலர் மௌன வாசிப்புப் பயிற்சியே அவசியமில்லை என விகண்டவாதம் செய்யலாம். சோதனைத் திட்டம் சுலபமாகவும் சீக்கிரமாகவும் நிறைவேற்ற முடியும். பிள்ளைகள் வாசிப்பில் முனைந்திருக்கும்போது, சோதனை வினாக்களைக் கரும்பலகையில் ஆசிரியர் எழுதலாம். ஆனால் வகுப்பு அறையிலேயே எழுதுவதைவிட வெளியில் எழுதவேண்டும், அல்லது முன்னதாகவே கரும்பலகையில் எழுதிவிட்டுப் பலகையைத் திருப்பி வைத்திருக்கலாம். வாசிக்கும்போது பிள்ளைகள் முன் எழுதுவது அவர்களது கவனத்தை வசீகரித்து வாசிப்பு வேகத்தைக் குறைக்கும். பகுதிகளுக்கு லக்கமிட்டு ஓரோர் லக்கப்பகுதிக்கும் உள்ள சோதனை வினாக்களை பெரிய தாள்களில் முன்னதாகவே எழுதி வைத்துக்கொண்டு, வாசிப்பு முடிந்தவுடன் வினாத்தாள்களைச் சுவற்றில் மாட்டி, விடைகளை எழுதச் சொல்லலாம். விடைகள் 5 அல்லது 10 நிமிஷ நேரத்தில் எழுத வேண்டும் ஆரம்பத்தில் வினாக்கள் அமைக்கும் விதம் சிரமமாயிருக்கலாம். விடைகள் எழுதும் நேர அளவு முறையும் ஒருவாறாக இருக்கலாம். ஆனால் காலக்கிரம அனுபவத்தில் ஆசிரியர்களுக்கு இவைகள் எளிதாகிவிடும்.

சரிபார்த்தல் :

குறிப்பிட்ட கால அளவிற்குள் பிள்ளைகள் விடை எழுதி முடித்தவுடன், பிள்ளைகளையே தம் விடைகளைச் சரிபார்க்கப் பழக்கப்படுத்த வேண்டும். இப்படிச் செய்வதால் ஆசிரியர் சிரமம் குறையும். ஆசிரியர் முன்னதாகவே தயாரித்து வைத்துள்ள தமது விடைத் தாள்களைச் சுவற்றில் மாட்டிவிட்டு பிள்ளைகள் தம் விடைகளை ஒப்பிட்டுச் சரிபார்த்துக்கொள்ளச் சொல்லவேண்டும். தாள்களில் விடைகள் எழுதாவிடில், கரும்பலகையில் முன்னதாகவே எழுதிவைத்துவிட்டுத் திருப்பி வைக்கலாம். இந்த விடைகள் எல்லாம் மாதிரி வழிகாட்டிகளாகும். எழுத்துக்கு எழுத்து சரியாக அதே விடைகளைத்தான் பிள்ளைகள் எழுதவேண்டும் என்பதில்லை. அதே கருத்து உள்ள விடைகளாக இருப்பது முக்கியம். ஆம், இல்லை, ஒரு சொல், அல்லது இரண்டு சொற்கள் விடைகள், ஒரு வாக்கியம் (அல்லது ஒரு வரி) விடைகளாக இருக்கும்படி வினாக்களைத் தரவேண்டும். மேலும் வினாக்கள் பொதுக் கருத்தை கிரகித்துக் கொண்டார்களாவென்று சோதிப்பதற்கே வினாக்கள் தரவேண்டும். மூலை முடுக்குகளில் பொதிந்து உள்ள மறைமுக விஷயங்களையும் இலக்கணச் சிறப்புக்களையும்பற்றி வினாக்கள் தரக்கூடாது.

மதிப்பிடுவது :

பிள்ளைகளே தம் விடைகளைச் சரிபார்த்து மதிப்பிட்டுக்கொள்ளும் பழக்கம் தருவது மிகவும் சிறப்பான பயிற்சி. 10 விடைகளும் சரி, அல்லது 8 தான் சரி என்று அவனவன் எழுந்து சொல்வான். மாணவர் தேர்ச்சி ரிஜிஸ்டரில் ஆசிரியர் குறிக்கலாம். ஒவ்வொரு மாணவனும் தன்

விடமுள்ள நோட்டுப் புத்தகத்தில் இந்த மார்க்கைக் குறித்துக் கொள்ளவும் சொல்லலாம். அல்லது வகுப்பில் தொங்க விடப்பட்டிருக்கும் பெரிய அட்டையில் அந்தந்த மாணவன் தன் பெயருக்கு எதிரில் மார்க்கையும் தேதியையும் குறிப்பிடலாம்.

கிரகித்தல் சோதனை

தேர்ச்சி ரிஜிஸ்தர்—V வகுப்பு

பகுதி அளவு 250 சொற்கள்

படிப்பு நேரம் 10 நிமிஷம்

	20-7-51	18-8-51	15-9-51
அப்பாசாமி	9	8	9
ஆறுமுகம்	7	8	8
இளங்கோவன்	9	9	10
ஊர்மிளா	6	7	8

இது ஆசிரியர் எழுதிக்கொள்ளும் ரிஜிஸ்தரில் மாதிரிப் பதிவுகள். இதேபோல் ஒவ்வொரு மாணவனும் தனது நோட்டுப் புத்தகத்தில் குறிப்பிட்டுக் கொள்வான். அவன் தனது தேர்ச்சியை மதிப்பிட்டுக் கொள்ள உதவும்.

அப்பாசாமி—V வகுப்பு

தேதி	20-7-51	18-8-51	15-9-51
விஷய அளவு	250	250	250
வாசிப்பு நேரம்	10 நிமிஷம்	10	10
மார்க்கு	9	8	9

இவ்விதம் மாதாமாதம் (அல்லது வாரா வாரம்) தன் தேர்ச்சி விருத்தியாவதையோ குறைவதையோ மாணவன் தானே பார்த்துக் கொள்கிறான். தன் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அவன் உறுதிப்படுத்திக் கொள்ள உதவியாகிறது.

சோதனைகள் இவ்விதம் நடத்துவதால் ஆசிரியர் வேலை மிகவும் சுலபமாகும். விடைகளைச் சரிபார்த்து மார்க்கு அளிப்பது பெரிய தொல்லை என ஆசிரியர்கள் கருதவேண்டியதில்லை. முன்னதாகவே திட்டமிடும் வேலைதான் சிரமம். பகுதிகளை ரகப்படுத்துவதும், அளவு கணக்கிடுவது, வினாக்கள் தயாரிப்பது, மாதிரி விடைகள் எழுதுவது இவைகளெல்லாம் சிரமம்தான். ஆரம்பத்தில் இந்த சிரமத்தைப் பொருட்படுத்தாமல் முயற்சி செய்து திட்டமிட்டுவிட்டால், பிறகு மிகவும் சுலபமாகிவிடும்.

அநேக பள்ளிச்சாலைகளில் மாதாந்தரப் பத்திரிகைகளும், பாலர் மலர்களும் வாங்குகிறார்கள். இவைகளில் தகுதியான சில பகுதிகளைப் பொறுக்கி உபயோகிக்கலாம். உயர்நிலைப்பள்ளிகளில் அல்லது வாசகசாலைகளில் பழைய சஞ்சிகைகளை வாங்கலாம். சில பெற்றோர்களிடமிருந்தும் கல்கி, கலைமகள், குமுதம், ஆனந்த விகடன் முதலிய பத்திரிகைகளின் பழைய பிரதிகளை இலவசமாகப் பெறக்கூடும். இவைகளைத் திரட்டி ரகப்படுத்தி, விஷய அளவும் வாசிப்பு நேரமும் கணக்குச் செய்து மௌன வாசிப்பு பிரியட்களில் உபயோகிக்கலாம்.

ஆசிரியர் சங்கங்கள் உதவி :

மௌன வாசிப்புத் திட்டம் அமைப்பதை ஒரோர் பள்ளியில் ஒரோர் சமயம் அனுஷ்டிப்பது மாத்திரம் போதாது. பரந்த அளவில் எல்லாப் பள்ளிகளிலும் பயிற்சி செய்து அனுபவம் ஏற்பட்டபிறகு ஒரோர் வகுப்புக்கான வாசிப்பு சராசரி வேகம் நிர்ணயிக்க முடியும். இதைச் செய்வதற்கு அந்தந்த வட்டார ஆசிரிய சங்கங்கள் முற்படுவது அவசியம். ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள பலவிதக் கஷ்டங்களை மாத்திரம் எடுத்துக் காட்டுவதுடன் ஆசிரிய சங்கங்கள் நின்றுவிடாமல், தங்களது சிறப்பான தொழிலில் பலவித நுட்ப அம்சங்களும் உண்டு. அந்த அம்சங்களை ஆசிரியர்கள் பரிசீலனை செய்து பயிற்சி முறைகளில் சீர்திருத்தமும் அபிவிருத்தியில் முன்னேற்றமும் சாதிக்கிறோம் என்று பொதுமக்கள் உணருமாறு சங்கங்கள் முயற்சி செய்வது அவசியம்.

சோதனை முறைகளில் புதிய சீர்திருத்தங்கள் செய்வது மிகவும் அவசரமான விஷயமாகும். பிள்ளைகளைக் காவல் புரியும் போலீஸ் ஆபீசர்களல்ல ஆசிரியர்கள். இந்தக் கருத்து ஒரோர் சமயம் சில ஆசிரியர்களிடம் மேலெழுந்து நிற்கும். ஆனால் இந்த மனப்பான்மை பொதுவாகவே ஆசிரியப் பண்புக்குப் புறம்பானது. பள்ளிச்சாலையில் சட்டதிட்டங்கள் பெரும்பாலும் போலீஸ் சட்டங்கள்போல அமையும்படி விடக்கூடாது. மாணவர்கள் எப்போதும் ஏமாற்றும் சுபாவம் கொண்டவர்கள் என்ற அடிப்படையில் அநேக விதிகளும் முறைகளும் ஏற்பட்டுவிட்டன. அந்நியர் ஆட்சியில் மக்களை அடக்கி பயமுறுத்தி வைத்து அடங்கி வாழும்படி

செய்த சட்டங்களின் எதிரொலி என்ற வகையில் இந்த சட்டங்கள் பெரும்பாலும் உள. அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெற்றபிறகு சுதந்திர மக்களுக்கான சீர் திருத்தச் சட்டங்கள் இனி அவசியம்.

நன்மதிப்பு :

இப்போது வாழும் பெரியோர்கள் சுதந்தர வாழ்வின் சுவையை இன்னும் பூரணமாக அனுபவித்து மகிழவில்லை என்றே சொல்லவேண்டும். ஏனெனில், அவர்கள் தாங்கள் தங்களது இளமையில் அனுபவித்துத் தவித்த சங்கடங்களையே இளஞ்சிருருக்கும் அமைத்துத் திட்டமிட முயற்சிக்கிறார்கள். இக்காலச் சிறுவர்கள் சுதந்தர இந்தியாவில் வளருபவர்கள். அவர்கள் இனி வருங்காலத்தில் பெரியவர்களாகி வாழும்போது தன் மதிப்பு மங்காமல் சுதந்தரப் பெருமையில் வாழவேண்டும். அடிமை மனப்பான்மையும் பயந்த சுபாவமும் ஒழியவேண்டும். "என் திறமையை நானே மதிப்பிட்டுப் பிறருடன் ஒப்பிட்டுப் பார்த்து, என் திறமையைப் பெருக்கிக்கொள்ள நானே முயற்சி செய்வேன். அடுத்தவனிடம் கடன் வாங்கி அதை என்னுடையது என்று காட்டி ஏமாற்ற முற்படமாட்டேன்" என்று ஒவ்வொரு பள்ளிப் பாலனும் கருதவேண்டும். தண்டனைக்குப் பயந்து ஏமாற்ற முற்படுகிறான். தயவு கிடைப்பதற்கோ, தற்காலிய மெச்சுதலை நாடியோ தன்மதிப்பை மறந்துவிடுகிறான். பாலன் வருங்கால வாழ்க்கை சுதந்தர நாட்டில் ஜனநாயக சமூகத்தில் அமையவேண்டும் அல்லவா? ஆசிரியர்கள் சேவை தற்சமயம் நமது நாட்டில் அதிமேன்மையாக அமைந்து, மகோன்னத பலனைத் தரவேண்டும். சுதந்தர மக்கள் சமூகத்தின் வளர்ச்சியும் பெருமையும் உருவாக்கும் வேலை அவர்களிடம் உள்ளது. இளைஞர்களின் தன்மதிப்பையும் கௌரவத்தையும் புண்படுத்தாமல் பெருமைப்படுத்தி வளர்க்கும் வகையில் பள்ளிச்சாலைப் பயிற்சிகளை அமைக்க வேண்டும். சோதனை மதிப்பீடு செய்து கொள்வதில் அவர்களே பழகும்படி மேலே விவரித்தவாறு செய்வது அவசியம்.

வாழ்க்கையில் துரித வாசிப்பு மிகவும் பயன் தரும். பள்ளிவிட்டுச் சென்ற பிறகு எவ்வளவோ சந்தர்ப்பங்களில் ஜனங்கள் வாசிக்கவேண்டிவரும். புத்தகங்களும், பத்திரிகைகளும் பெருகிவிட்டன. பள்ளியில் மௌன வாசிப்புப் பயிற்சி நன்றாக அளித்து உதவினால் அவர்கள் வருங்கால வாழ்க்கை மிகவும் இன்பகரமாகவும் வெற்றிகரமாகவும் இருக்கும். பத்திரிகைகளும், விளம்பரங்களும், கடிதங்களும் வந்து குவியும் போது, ஒருவன் துரிதமாக அவைகளைக் கண்ணோட்டம் செய்து முக்கிய விஷயங்களை மாத்திரம் கிரகித்துக்கொள்ளும் சக்தி பெற்றிருந்தால் அவன் எவ்வளவு திறமையாக வேலை நடத்துவான்! மாபெருந் தலைவர்களும் பெரிய வியாபாரிகளும் செயலாளர்களும் இவ்வித சக்தி பெற்றிருந்தால் தான் காலத்தை வீணாக்காமல் சிறிது காலத்தில் பல பெரிய விஷயங்களை கிரகித்து முடிவு செய்யும் திறமையை அவர்கள் பெற முடியும். இப்போது பள்ளியில் உள்ள சிறுவர்கள் இனி வருங்காலத்தில் அவ்விதத் திறமைசாலிகளாக ஆகவேண்டுமல்லவா? மௌன வாசிப்புப் பயிற்சியை நன்றாக அளித்தால் சிறந்த பலனை எதிர் பார்க்க முடியும். காலத்தை வீணாக்காமல் துரிதமாகப் படித்து பொருள் கிரகித்துக் கொள்ளும் திறமை வரும்.

ஆசிரியர்களுக்கு உதவியாக மாதிரிப் பயிற்சிப் பகுதிகள் சில அடுத்த இதழில் பிரசுரிப்போம்.

[குறிப்பு :—சென்ற இதழில் உள்ள மௌன வாசிப்பு என்ற கட்டுரையில் "உறக்க" என்ற பதங்களை "உரக்க" என்று திருத்திக்கொள்ளவும்.—ப-ர்.]

சந்தாதார்களுக்கு அறிக்கை

1954 நவம்பர் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள்:—

வட ஆற்காடு—NA. 36.
சேலம்—S. 13.
கோயம்புத்தூர்—Co. 37.
தஞ்சாவூர்—Tan. 20, 25.
ராமநாதபுரம்—Rd. 7, 49, 50.

குறிப்பு:—ஷை சந்தாதார்களும் சந்தா பாக்கியுள்ள மற்ற சந்தாதார்களும் தங்கள் சந்தாத் தொகையை இம்மாத முடிவிற்குள் கட்டிவிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அடுத்த இதழை வி. பி. யில் அனுப்ப நேரிடுமாகையால் சந்தாவை முன்கூட்டியே செலுத்திவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் சந்தா அனுப்ப அசௌகரியமுள்ளவர்கள் செலுத்தக்கூடிய தவணையை முன்பாகவே தெரிவிக்கலாம்.

—பத்திராதிபர்

ஆரம்ப பாடசாலைக்குரிய எமது பாட புத்தகங்கள்

நமது தாய்மொழி வாசகம்

ஆசிரியர் N. பரமசிவ அய்யர், பி. ஏ., எல். டி.

			அ.	பை
முதற் புத்தகம்	(முதல் வகுப்பு)	....	4	0
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	....	5	0
மூன்றாம் புத்தகம்	(மூன்றாம் வகுப்பு)	....	6	0
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	....	7	0
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	....	7	6

எமது புதிய கணக்குப் புத்தகங்கள் புதிய பாடதிட்டத்திற்கேற்ப பல புதிய நோக்கங்களுடன் எழுதப்பட்டுள்ளன.

கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

ஆசிரியர் S. ஜகந்நாதன்
(கிண்டர்கார்டன் உதவி ஆசிரியர், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, சென்னை)

J. ராமச்சந்திரன், B. A. (HONS.) M. Ed. திருத்தியமைத்தது

முதற் புத்தகம்	(முதல் வகுப்பு)	....	அணா	5
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	....	,,	6
மூன்றாம் புத்தகம்	(மூன்றாம் வகுப்பு)	....	,,	10
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	....	,,	13
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	....	,,	14

பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

"காலமெனும் மண்மீது அடிச்சுவட்டைக் கண்டு
கடவுள் தந்த சடலமிதை பயன்படுத்திக் கொண்டு
ஞாலமிசை நல்லவராய் வாழ்ந்திடவே பண்டு
ஞானமுனிவோர்கள் எல்லாம் செய்தார்கள் தொண்டு"

ஜெமினி

ஔவையார்

மீண்டும் உங்களை மகிழ்விக்க

ஜனவரி 14உ முதல்

சென்னை

வெலிங்டன், பிரபாத், சரஸ்வதி

மூன்று தியேட்டர்களிலும் மற்றும் தமிழ்நாடெங்கும்

கணக்கு : கற்பித்தல்

கூட்டல், கழித்தல்

T. S. ராஜகோபாலன், B.A., L.T.,
இந்து உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி

கூட்டல்: இரண்டு - இலக்க எண்கள்

உபகரணங்கள் :—*முன் இதழில் சொல்லியபடி நெருப்புப் பெட்டிகளும் தனி ரப்பர் துண்டுகளும்.*

கற்பிப்பவர் ஒரு பெட்டியிலுள்ள துண்டங்களை எண்ணி, அந்தப் பெட்டி முழுதும் 10-*ஐக் குறிக்குமென்றும், இவ்வாறு ஒவ்வொரு பெட்டியும்* 10-*ஐக் குறிக்குமென்றும் சொல்லவேண்டும். பின்னர் ஒரு பெட்டியுடன் வேறொன்றைச் சேர்த்து, இரண்டு பெட்டிகள் உள்ளன, அதாவது இரண்டு பத்துக்கள், அதாவது* 20 *உள்ளன என்று சொல்லவேண்டும்.*

இதை 10-*ம்* 10-*ம்* 20 *என்றும்,*

```
10
10
——
20  என்றும் எழுதவேண்டும்.
——
```

இவ்வாறே பின்வரும் கூட்டல்களைக் கரும்பலகையில் எழுதவேண்டும்.

10	10	10	10	10	10	10	20	20
20	30	40	50	60	70	80	20	30
—	—	—	—	—	—	—	—	—
20	20	20	20	30	30	30	30	40
40	50	60	70	30	40	50	60	40
—	—	—	—	—	—	—	—	—
40	20	30	40	50	60	70	80	30
50	10	10	10	10	10	10	10	20
—	—	—	—	—	—	—	—	—
40	50	60	70	40	50	60	50	
20	20	20	20	30	30	30	40	
—	—	—	—	—	—	—	—	

*முன் இதழில் அச்சிட்டுள்ள "*100-*படத்தைக்" கொண்டு இக்கூட்டல்களைச் செய்யச் சொல்லலாம்.*

பின்னர் இக்கணக்குகளைக் கரும்பலகையில் எழுதி, சிறுவர் சிறுமியர்களை விடைகளை மாத்திரம் சொல்லும்படி செய்ய வேண்டும்.

ஒரு வகுப்பில் 14 *குழந்தைகளும், வேறொன்றில்* 23 *குழந்தைகளும் இருக்கின்றனர். இந்தக் குழந்தைகளின் மொத்த எண்ணிக்கையைக் கணக்கிட* 23-*ஐயும்* 14-*ஐயும் கூட்டவேண்டும். இந்தக் கூட்டலை*

	பத்து	ஒன்று
14	1	4
23 *என்றும்*	2	3
—	—	—

3-*ம்* 4-*ம்* 7 ; 2 *பத்தும்* 1 *பத்தும்* 3 *பத்து.*

ஆதலால் மொத்தம் 30-*ம்* 7-*ம், அதாவது* 37.

இந்தக் கூட்டலில் வரும் இரண்டு கூட்டல்களையும் பின்வருமாறு கரும்பலகையில் அமைத்தால், இதை மனதில் ஏற்றுக்கொள்ளுவது எளிதாகும்.

14	14
23	23
—	—
7	37
—	—

முன்பு சொல்லியவாறு நெருப்புப் பெட்டிகளையும், தனித்துண்டுகளையும் உபயோகித்தும் இக்கூட்டலைச் செய்யலாம்.

இம்மாதிரியான கூட்டல்களைக் கரும்பலகையில் எழுதி ஒவ்வொன்றின் மொத்தத்தையும் அப்போதப்போது வாயால் சொல்லும்படி செய்யவேண்டும். இக்கணக்குகளில் ஒன்று ஸ்தானத்திலுள்ள இலக்கங்களின் மொத்தமும், பத்து ஸ்தானத்திலுள்ள இலக்கங்களின் மொத்தமும், 9-*க்கு மிகாமல் இருக்க வேண்டும்.*

யுக்திக் கணக்குகள்

1. *புளியவிரை ஆட்டத்தில் மணியன் முதலில்* 23 *விரைகளும் பின்பு* 34 *விரைகளும் பெற்றான். மொத்தமாகக் கிடைத்தது எத்தனை ?*

2. விமலா காலையில் 15 நிமிடமும், மாலையில் 23 நிமிடமும் பாடினாள். மொத்தம் எத்தனை நிமிஷ காலம் பாடினாள்?

3. ஒரு வகுப்பில் முதல் பிரிவில் 34 குழந்தைகளும் இரண்டாம் பிரிவில் 22 குழந்தைகளும் படிக்கிறார்கள். மொத்தம் எத்தனை பிள்ளைகள் படிக்கிறார்கள்?

4. பாக்கத்திலிருந்து குறிச்சிக்கு 21 மைல், குறிச்சியிலிருந்து பேட்டைக்கு 37 மைல். பாக்கத்திலிருந்து குறிச்சி வழியாகப்

21 மைல் 37 மைல்

o——————o——————o

பாக்கம் குறிச்சி பேட்டை

பேட்டைக்கு எத்தனை மைல் தூரம்?

கூட்டல்: "செங்குத்துக் கூட்டல்"

மாதிரி	3	இதில் 4-ம் 2-ம் 6;
	2	இந்த 6-ஐ மனதில் வைத்
	4	துக்கொண்டு, 6-ம் 3-ம்
	—	9 என்று கூட்டவேண்
		டும்.

இதுமாதிரிக் கூட்டல்களில் கீழேயுள்ள இரண்டு எண்களின் மொத்தம் 9-க்கு மிகாமல் இருக்கவேண்டும். கூட்டல்களைக் கீழிருந்தே செய்வது நன்று.

பின்வரும் மாதிரிகளைக் கவனிக்க:

(1)	2	3	2	1	9	8	7	6	2	2
	6	2	3	1	4	2	0	3	1	3
	1	3	4	8	2	3	2	0	2	4
	—	—	—	—	—	—	—	—	—	—
(2)	1	2	7	8	9	7	8	7	5	0
	2	4	1	3	2	0	3	8	0	3
	6	5	8	6	5	8	6	0	0	6
	—	—	—	—	—	—	—	—	—	—

(3)	12	18	27	32
	13	20	31	15
	14	31	20	42
	—	—	—	—
(4)	82	33	74	85
	21	52	60	83
	23	43	32	10
	—	—	—	—

கழித்தல்: "கடன் வாங்காதது"

இப்பகுதியில் முதலில் சொல்லியது போல் உபகரணங்களை வைத்துக்கொண்டும், "நூறு-படத்தைப்" பயன்படுத்தியும் பின்வரும் மாதிரிகளைக் கரும்பலகையில் எழுதவேண்டும். பின்பு குழந்தைகளையே இவற்றை மனதில் செய்யச் சொல்லவேண்டும்.

40	50	60	70	80	90	30	40	50	60
10	10	10	10	10	10	20	20	20	20
—	—	—	—	—	—	—	—	—	—
70	80	90	40	50	60	70	80	90	50
20	20	20	30	30	30	30	30	30	40
—	—	—	—	—	—	—	—	—	—
60	70	80	90	60	20	30	50	80	90
40	40	40	40	50	20	30	50	80	90
—	—	—	—	—	—	—	—	—	—

கழிக்கும்போது உபயோகப்படும் முறைகள் இரண்டு. அதாவது 9-லிருந்து 6-ஐக் கழிப்பதற்கு 9-லிருந்து 6 போனால் மீதி 3 என்று சொல்லலாம்; அல்லது 6-ஒடு 3 கூட்டினால் 9 ஆகும், ஆதலால் மீதி 3 என்றும் சொல்லலாம். இம்முறைகள் இரண்டும் குழந்தைகளுக்குத் தெரியவேண்டும். இவற்றுள் இரண்டாவது முறை கழித்தல் எளிதில் செய்யப்பயன்படும், ஆயினும் முதலில் கற்றுக்கொள்ளுவது சிறிது சிரமமாகும். எனவே முதன் முதலில் முதலாவது முறையையே கற்பித்து, கழித்தலில் ஆற்றல் ஏற்படும்போது இரண்டாவது முறையை அவ்வப்போது சிறிதளவு கற்பிக்கலாம். மேல் வகுப்புக்களில் இரண்டாவது முறையை நன்கு கற்பிக்கலாம்.

மாதிரி: 43 மிட்டாய்களில் 32 செலவாயின. மீதி எத்தனை?

இதை	43		பத்து	ஒன்று	
	32	என்றும்	4	3	
	—		3	2	என்றும்
			—	—	

எழுதலாம்.

3-ல் 2 போனால் மீதி 1.

4 பத்தில் 3 பத்து போனால் மீதி ஒரு பத்து.

ஆதலால் மீதி 1 பத்தும் 1-ம், அதாவது பதினொன்று (11). கழித்தலைப் பின்வருமாறு கரும்பலகையில் எழுதவேண்டும்.

4	3		43
3	2		32
—	—		—
	1		11
			—

முன்பு சொல்லியது போல் நெருப்புப் பெட்டிகளையும் தனித்துண்டங்களையும் உப

யோசித்து இம்மாதிரியான கழித்தல்களைச் செய்யலாம்.

இம்மாதிரிக் கழித்தல்களைச் செய்யக் கற்றபின்பு, சில கழித்தல்களைக் கூட்டல் முறையில் செய்யும்படி கற்பிக்கலாம். மேலுள்ள மாதிரியில், 2 ஓடு என்ன கூட்டினால் 3 ஆகும்? விடை 1. 3 பத்தோடு என்ன கூட்டினால் 4 பத்தாகும்? விடை 1. ஆதலால் கழித்து வந்த விடை 1 பத்தும் 1-ம், அதாவது 11.

இவ்வாறு கழித்தல் கற்கும்போது, கழித்தலின் மூன்று வகைகளிலும் கணக்குகள் செய்யும் ஆற்றல் குழந்தைகளுக்கு ஏற்படவேண்டும். ஆதலால் அப்போதப்போது பின்வருமாறு பயிற்சிகள் கொடுக்க வேண்டும்?

(1) 32, 48—இவற்றுள் எது பெரியது? எவ்வளவு?

(2) 67, 35—இவற்றுள் எது சிறியது? எவ்வளவு?

(3) 42 உடன் என்ன கூட்டினால் 67 ஆகும்?

(4) 65-லிருந்து என்ன கழித்தால் 32 ஆகும்?

பயிற்சிகளும் சோதனைகளும்: முன்பு விவரித்தவாறே.

கூட்டல்: கடினமான கணக்குகள்

கூட்டல்களில் கடினமானவை, ஒன்று ஸ்தானத்திலுள்ள இலக்கங்களைக் கூட்டி வந்த மொத்தத்தில் ஒரு இலக்கத்தை எழுதிய பிறகு மீதியைப் பத்து ஸ்தானத்திற்கு எடுத்துப்போக வேண்டியவையாகும். இக்கூட்டல்களையும் முன்போல் கற்பிக்கலாம். உபகரணங்கள் முன்பு போலவே.

37 மிட்டாய்களும் 25 மிட்டாய்களும் சேர்ந்து மொத்தம் எத்தனை?

37 மிட்டாய்களைக் காட்ட 3 பெட்டிகளையும் 7 தனித் துண்டுகளையும் ஓரிடத்தில் வைக்கவேண்டும்; 25 மிட்டாய்களைக் காட்ட 2 பெட்டிகளையும் 5 தனித் துண்டுகளையும் வேறொரு இடத்தில் வைக்கவேண்டும். பின்பு பெட்டிகளைப் பெட்டிகளோடும், தனித் துண்டங்களை ஒன்றாகவும் சேர்க்க வேண்டும். 7-ம் 5-ம் 12; இந்தப் பன்னிரண்டு துண்டங்களில் 10 துண்டங்களை ஒரு பெட்டியில் போட்டால், மீதி இரண்டு துண்டங்கள் இருக்கும். ஆதலால் 7-ம் 5-ம் சேர்ந்து ஒரு பத்தும் 2-ம் ஆகும். பெட்டிகளை இப்போது ஒன்று சேர்த்தால், மொத்தம் 1+3+2 பெட்டிகள் ஆகும், அதாவது 6 பெட்டிகளாகும். ஆக, மொத்தம் 6 பெட்டிகளும் 2 துண்டுகளும் ஆகும், அதாவது 62 ஆகும்.

இந்த விவரங்களைப் பின்வருமாறு காட்டலாம்:

பெட்டி	துண்டு	பத்து	ஒன்று
2	5	2	5
3	7	3	7
	12		12

அதாவது

பெட்டி	துண்டு	பத்து	ஒன்று
2	5	2	5
3	7	3	7
1		1	
6	2	6	2

இவ்வாறு சில கூட்டல்கள் கற்பித்த பிறகு, கூட்டல்களைப் பின்வருமாறு எழுதப் பழக்கவேண்டும்.

25	25		25
37	37	மீதியைப் பக்கத்திலுள்ளவாறும் எழுதலாம்.	37
2—மீதி 1	62		62
			1

இவ்வாறு 4, 5 நாட்கள் பழகியபிறகு, மீதியை எழுதாமல் மனதில் வைத்துக்கொண்டு பத்து ஸ்தானத்திய இலக்கங்களுடன் கூட்டப் பழக்கம் பெறவேண்டும்.

கூட்டல்கள் தரங்களாகப் பிரிக்கப்பட்டால், குழந்தைகள் இவற்றை எளிதில் கற்பார்கள். பின்வருவன உதாரணங்களாகும்

(1)	27	43	79	63	78	29	39
	38	39	18	28	19	58	39
(2)	43	39	58	82	67	59	38
	58	62	48	19	38	49	69
(3)	43	54	83	93	79	98	99
	68	79	69	68	63	98	99

(4)	18	28	45	33	29	53	62
	113	137	138	248	331	428	419
(5)	218	419	615	328	4[illegible]7	623	
	123	329	138	238	439	258	
(6)	318	729	615	365	263	355	
	23	38	49	25	27	35	

3-இலக்க எண்கள் வரும் கூட்டல்களில் கவனிக்க வேண்டுவது: பத்து ஸ்தானத்திலுள்ள இலக்கங்களைக் கூட்டிக் கிடைக்கும் மொத்தம் 9-க்கு மிகாமல் இருக்க வேண்டும். 9-க்கு மேல் மொத்தம் வரும் கூட்டல்கள் மேல் வகுப்புக்களில் கற்பிக்க வேண்டும்.

கழித்தல்: "கடன்வாங்கிக் கழித்தல்"

32 மிட்டாய்களில் 5 மிட்டாய்கள் செலவாயின; மீதி எத்தனை? மேஜையில் 3 பெட்டிகளையும் 2 தனித்துண்டங்களையும் வைத்தால், இவை 32-ஐக் காட்டும். தனியாக 2 துண்டங்கள் இருப்பதால், இவற்றிலிருந்து 5 கொடுக்க முடியாது. ஆதலால் ஒரு பெட்டியிலுள்ள துண்டங்களைக் கீழே கொட்டி, அவற்றுடன் 2 துண்டங்களைச் சேர்த்தால், மொத்தம் 12 துண்டங்களாகும். இவற்றிலிருந்து 5-ஐ எடுத்துவிட்டால் மீதி 7 துண்டங்களாகும். மீதியுள்ள பெட்டிகள் 2. ஆதலால் மீதியுள்ள துண்டங்கள் 2 பெட்டியும் 7-ம் ஆகும், அதாவது 27 ஆகும். இந்த விவரங்களைக் கரும்பலகையில் பின்வருமாறு எழுதலாம்.

பெட்டிகள்	துண்டங்கள்	பெட்டிகள்	துண்டங்கள்
3	2	2	12
	5		5
		2	7 மீதி

இவ்வாறு சில கணக்குகள் செய்த பின்பு, இக்கழித்தல்களில் சிலவற்றைப் பின்வருமாறு எழுதவேண்டும்.

பத்து	ஒன்று	பத்து	ஒன்று
3	2	2	12
	5		5
		2	7 மீதி

நாளடைவில் பத்து ஸ்தானத்திலிருந்து ஒன்றை எடுத்து ஒன்று ஸ்தானத்தில் பத்தாகக் கூட்டிக்கொள்வதை மனதிலேயே வைத்துக்கொண்டு, விடையை மாத்திரம் எழுதப் பழக்கவேண்டும்.

கழித்தல் கணக்குகளையும் தரங்களாகப் பிரித்து, எளிய கணக்குகளிலிருந்து கடினமானவை வரையில் படிப்படியாகக் கற்பித்தல் மிகவும் அவசியமாகும். பின் வருவன உதாரணங்களாகும்:

(1) ஆதாரக் கழித்தல்கள் வருவன:

27	37	47	57	67	77	87
9	9	9	9	9	9	9
26	36	46	25	35	24	34
8	8	8	7	7	8	8
33	33	33	33	33	33	43
8	7	6	5	4	9	9

(2) பத்து ஸ்தானத்தில் "கடன் வாங்காத" கழித்தல்கள்:

87	97	43	68	98	73	92
29	39	18	29	29	28	39

(3) பத்து ஸ்தானத்தில் மீதி பூஜ்யம் வரும் கழித்தல்கள்:

32	54	73	87	95	92	62
23	49	68	78	87	83	59

(4) மூன்று-இலக்கங்கள்: ஒன்று ஸ்தானத்தில் மாத்திரம் 'கடன்-வாங்கும்' கழித்தல்:

383	455	532	443	555
128	238	219	238	248
327	578	673	985	343
319	539	618	918	318
245	395	673	488	532
38	87	39	59	23

யுக்திக் கணக்குகள், பயிற்சிகள், சோதனைகள்—முன்புபோல்.

7 - AUG 1956

ஆதாரக் கல்வியில் புத்தகங்கள்*

சுந்தரராஜ் ஜேம்ஸ், B. A., L. T.
(தலைமை ஆசிரியர், அரசினர் ஆதாரப் பயிற்சிப்பள்ளி, திருவூர்)

'ஆதாரக் கல்வியில் புத்தகங்களுக்கு இடமில்லை. புத்தகப் படிப்பே ஆதாரக் கல்வி முறைக்கு முரணானது. பாலர் பயிற்றலில் புத்தகத்தை பயன்படுத்தாமலிருப்பது தான் ஆதாரக்கல்வியின் சிறப்பான அம்சம்' என்பன போன்ற தவறான எண்ணங்கள் இன்றைக்கு கல்வித் துறையிலுள்ளோர், கல்வித் துறைக்குப் புறம்பாகவுள்ளோர் இவ்விரு திறத்தாரின் மனத்திலும் நிலவி வருவது வருந்தத்தக்கது.

பாலர் கல்வியில் கற்றல் நடைபெறுவதற்கான சாதனங்களில் சிறப்பாக இரண்டினைக் குறிப்பிடுவதுண்டு. 'நேரிடை அனுபவம்' ஒன்று. புத்தகம் மற்றொன்று. நேரிடை அனுபவத்தைப் பாலருக்கு அளிப்பதின் மூலம் கற்றல் திறம்பட நடைபெறுகிறது. புத்தகத்தைப் பயன்படுத்துவது மூலமும் கற்றல் நடைபெறுவது சாத்தியம். பாலர் கல்வியில் செயலும் அனுபவமும் கற்றலுக்கான சிறந்த சாதனங்களென்றாலும், புத்தகத்திற்கும் சிறப்பான இடம் உண்டு என்பது மறுக்கமுடியாத உண்மை. நாம் வாழ்க்கையில் பெற்றுக் கொள்ள வேண்டிய அறிவு முழுமையும் நேரிடை அனுபவத்தின் மூலம் கிடைக்கப் பெறுமென்பது சாத்தியமில்லை. புத்தகத்தின் வாயிலாகவும் அறிவும் திறமையும் பெற்றுக் கொள்ளவேண்டும்.

புத்தகம் என்பது என்ன? பல்வேறு அனுபவங்களின் பதிவே புத்தகம். புத்தகத்தின் மூலம் கற்பதும் அனுபவத்தின் மூலம் கற்பதும் ஒருவாறு ஒன்றே. ஏனென்றால் புத்தகத்தில் அடங்கியுள்ள பொருள் அனுபவத்தின் வாயிலாக வந்ததே. முதியோருக்கு, புத்தகத்தின் மூலம் கற்பதும் அனுபவத்தின் மூலம் கற்பதும் ஒன்றே எனலாம். பாலருக்கோ, கற்றல் அனுபவத்தின் மூலம் நடைபெறுவதே பொருத்தமானது. ஆனால் நேரிடை அனுபவம் கிட்டாத சந்தர்ப்பத்தில் புத்தகத்தைப் பயன்படுத்தவேண்டும். மேலும், நேரிடை அனுபவத்தின் மூலம் பெற்ற அறிவை இன்னும் விரிவாக்கவும், பிறர் அனுபவத்தைப்பற்றி அறிந்துகொள்ளவும் புத்தகத்தைப் பயன்படுத்தவேண்டும்.

ஆகவே, எக்கல்விமுறையானாலும், பாலர் பயிற்றலில் புத்தகத்திற்குச் சிறப்பான இடம் அளிக்கவேண்டும். பாலர் புத்தகத்தைப் பயன்படுத்துவதை ஆதாரக் கல்வியும் அனுமதிக்கின்றது. பாலருக்கு அறிவளிப்பதில் புத்தகமும் ஓர் சிறந்த சாதனம் என்று ஆதாரக் கல்வித் துறையிலுள்ளோர் ஒத்துக்கொள்ளுவர். கற்றல் திறம்பட நடைபெறுவதற்குப் புத்தகமும் இன்றியமையாதது என்றே ஆதாரக் கல்வி வற்புறுத்துகின்றது. ஆகவே, ஆதாரக் கல்வியை 'புத்தகமே இல்லாத கல்வி' என்று குறிப்பிடுவது குறுகிய நோக்குடையவரின் செயலாகும்.

ஆதாரக் கல்வியில் புத்தகத்தின் இடமென்ன? ஆதாரப் பள்ளியில் பாலர் புத்தகத்தை எந்த அளவிற்குப் பயன்படுத்த வேண்டும்? எத்தகைய புத்தகம் ஆதாரப் பள்ளிக்குப் பொருத்தமானது? என்பன போன்ற பிரச்னைகள் இன்று ஆதாரக் கல்வித் துறையிலுள்ளோர் முக்கிய கவனத்தைப் பெற்றுவருகின்றன.

புத்தகத்திற்கே சிறப்பான இடமளித்தது முன்னாள் கல்வி. கற்றல் நடைபெறுவதற்கு புத்தகம் ஒன்றே சிறந்த சாதனமாக பயன்பட்டு வந்தது. ஆனால் தற்காலக் கல்வியில் பள்ளிகளில் நேரிடை அனுபவம், செயல் இவற்றிற்கே சிறப்பான பங்குண்டு. சிறப்பாக, ஆதாரக் கல்வியில் நேரிடை அனுபவம், வாழ்க்கைச் செயல், உற்பத்தித் தொழில், வேலை இவைகளே பாலர் கல்விக்கான சிறந்த சாதனங்களாகப் போற்றப்பட்டு வருகின்றன. எனவே, ஆதாரப்பள்ளிகளில் புத்தகம் புறக்கணிக்கப்படுவதாகத் தோன்றுகிறது. ஆனால் புத்தகத்தைப் பயன்படுத்துவதற்கு ஆதாரப் பள்ளியே பாலர்களுக்குப் பல்தரப்பட்ட, அநேக வாய்ப்புக்களை அளிக்கின்றது.

ஆதாரப் பள்ளிகளில், பாலர், செயல் மூலம் பெற்ற அறிவை நிலையுறுத்தவும்

*திருவூர் அரசினர் ஆதாரப் பயிற்சிப்பள்ளி கையெழுத்துச் சஞ்சிகையிலிருந்து எடுக்கப்பட்டது.

விரிவாக்கவும் புத்தகங்களைப் பயன்படுத்துகிருர்கள், 'தாவரங்களுக்குப் பயன்படும் எரு' என்னும் தலைப்பைப்பற்றிக் கற்றுக்கொள்ளவிருக்கும் ஐந்தாவது வகுப்பு மாணவர் 'எருத்தயாரித்தல்' என்ற செயலை நடப்பித்து, நேரிடை அனுபவத்தைப் பெற்று 'எரு' வைப்பற்றித் தெரிந்து கொள்ளுகின்றனர். மேலும் வாசிப்பு நேரத்தில், வகுப்பு நூல்நிலையத்தில் கிடைக்கப் பெறும் புத்தகத்தில் 'எரு'வைப் பற்றிய பிற விவரங்களையும் படித்துக்கொள்ளலாம். புத்தகத்தில் போதிய விவரம் இல்லாத போது ஆசிரியரே 'எரு'வைப்பற்றி முழு விவரமும் அளிக்கும் சிறிய புத்தகம் ஒன்றைத் தயாரித்து மாணவர்களுக்கு அளிக்கிருர். ஆதாரப்பள்ளி ஆசிரியர் தன் வகுப்பிற்குப் பொருத்தமான புத்தகங்கள் எழுதும் ஓர் புத்தகாசிரியராக செயலாற்ற வேண்டுமெனவும் ஆதாரக் கல்வி எதிர்பார்க்கின்றது. ஆகவே, பாலர் புத்தகத்தைப் பயன்படுத்துவதை ஆதாரக் கல்வி ஆதரிக்கின்றது என்பது தெளிவாகும். ஆதாரப்பள்ளிகளில், புத்தகத்தின் துணை கொண்டு, பாலர் தங்கள் அறிவை விருத்தியாக்குகின்றனர். பாலர், புத்தகத்தின் மூலமும் கற்பதை ஆதாரக் கல்வி எதிர்க்கவில்லை புத்தகத்தின் மூலம் போதனை நடத்துவதே, ஆதாரக் கல்வியில் இடம் பெறவில்லை. பாலர் புத்தகத்தைப் பயன்படுத்தலாம். ஆனுல் 'புத்தகத்தை மையமாகக்கொண்ட பாலர் பயிற்றலே' ஆதாரக் கல்வி முறைக்கு முரணுனது. பாலருக்கேற்ற புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதிலும், தகுதியான புத்தகங்கள் இல்லாத போது தானே பாலருக்கேற்ற புத்தகங்களைத் தயாரித்துப் பாலருக்கு அளிப்பதிலும் ஆதாரப்பள்ளி ஆசிரியரின் பொறுப்பு மிக மிகச் சிறப்பானது.

ஆதாரப்பள்ளிகளில், பாலர் பயன்படுத்துவதற்கான புத்தகங்கள் எத்தகையதாகவிருக்கவேண்டும்? ஆதாரக் கல்வித் தத்துவங்கள், பாடப்பொருள் (Content), முறை (Methodology) இவற்றிற்கேற்ப, புத்தகங்கள் எவ்வாறு எழுதப்படவேண்டும்? ஆதாரப் பள்ளிகளில் பயன்படுத்தப்படும் புத்தகம், சாதாரணப் பள்ளிகளில் பயன்பட்டு வரும், தொன்றுதொட்ட முறையில் அமைந்துள்ள புத்தகத்தினின்று வேறுபட்டதாகவிருக்க வேண்டுமென கருதப்படுகிறது. ஆதாரக் கல்விப் பாடப்பொருள், முறை இவ்விரண்டையும் அனுசரித்தே, புத்தகம் எழுதப்படவேண்டும். ஆதாரப் பள்ளி வகுப்புக்களுக்கான ஓர் விரிவான பாடத்திட்டத்தை ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தார் வெளியிட்டிருக்கிருர்கள். இப் பாடத்திட்டத்தை மாத்திரம் நோக்காக வைத்துக்கொண்டு பல்வேறு பாடங்களுக்கான புத்தகங்களை தயாரிக்கலாம் என்ற கொள்கை முற்றிலும் ஒத்துக்கொள்ளப் பட்டிருந்தால், இன்றைக்கு அநேக புத்தகங்கள் வெளிவந்திருக்கும்.

ஆதாரப் பள்ளிகளில் பாலருக்குப் பாடத்திட்டத்திலுள்ள பல்வேறு பாடங்களைப் பற்றிய அறிவு ஓர் செயலோடு 'இணைந்தே அளிக்கப்பட்டு வருகின்றது. இதை இணைப்பு முறை (Method of correlation) என்கிருேம். ஓர் செயலை மையமாகக் கொண்டே, பல்வேறு பாடங்களுக்குரிய, ஒருமைப்பாடடைந்த அறிவைப் பாலருக்குத் தகுந்த அளவில் பொருத்தமான நேரத்தில் அளிக்க வேண்டும். இந்த நிபந்தனையை ஆதாரக் கல்வி வற்புறுத்துவதனுல் ஆதாரப்பள்ளி ஆசிரியர் பாலர் இவர்களுக்கான புத்தக்ங்களும், ஆதாரக் கல்விப் பாடத்திட்டம், இணைப்பு முறை இவ்விரண்டையும் அடிப்படையாகக்கொண்டு அமையவேண்டும் என்று கருதப்படுகிறது. இதனை ஆதாரக் கல்வியில் பழுத்த அனுபவம் பெற்றவரும், ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தலைவருமான காகா கலேல்கார் அண்மையில் நடந்த பத்தாவது ஆதாரக் கல்வி மகாநாட்டில் தமது தலைமையுரையில் தெளிவாகக் கூறியுள்ளார். 'ஆதாரக் கல்வியின் மிகச் சிறப்பான அம்சம் என கருதப்படும் இணைப்பு முறைக்கேற்ப, பாலர் ஆசிரியர் இவர்களுக்கான புத்தகங்களை வெளியிடுவதில் ஆதாரக்கல்வித் துறையிலுள்ளோர் கவனம் செலுத்தவேண்டும்.' பல்வேறு பாடங்களையும் இணைத்து அறிவளிக்கும் விவரப் புத்தகம் (Correlated encyclopaedia with cross references) ஒன்று எழுதப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தியிருக்கிருர்.

ஆதாரக் கல்விப் பாடப்பொருள், முறை இவற்றை அடிப்படையாகக்கொண்டே ஆதாரப்பள்ளிக்கான புத்தகங்கள் எழுதப்படவேண்டும் என்ற நிபந்தனை ஒருபுறமிருக்க, ஆதாரக் கல்விப் பாடப்பொருளை மாத்திரம் நோக்காக வைத்து பல்வேறு பாடங்களுக்கான விவரங்களையும் அறிவையும் அளிக்கும் வாசிப்புப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அளிக்கப்படலாம். இத்தகைய

வாசிப்புப் புத்தகங்களும், 'பல்வேறு பாடங்களையும் இணைத்து அறிவளிக்கும் விவரப் புத்தகங்களும் விரைவில் நன்முறையில் எழுதப்பட்டு பெருவாரியாக வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம். அது வரைக்கும் ஆதாரப்பள்ளிகளில் சாதாரணப் பள்ளிகளில் பயன்பட்டு வரும் பாடப் புத்தகங்களினின்று தேர்ந்தெடுக்கப்பட்ட, தேவையான பகுதிகளை வாசிப்புப் பொருளாகத் தகுந்த நேரத்தில் ஆசிரியரும் மாணவரும் பயன்படுத்தலாம். ஆனால், புத்தகம் பயன்படுத்துவதில், ஆதாரப்பள்ளிக்கும் சாதாரணப் பள்ளிக்கும் ஓர் சிறப்பான வேறுபாடு உண்டு. சாதாரணப் பள்ளிகளில், பாடப்புத்தகம் ஆரம்பம் முதல் முடிவு வரைக்கும் பொருளடக்கத்தில் தலைப்புகள் அமைந்த ஒழுங்கின்படியே பின்பற்றப்படுகின்றது. ஆதாரப் பள்ளிகளில் ஆசிரியரும் பாலரும் புத்தகத்திற்கு அடிமைகளல்ல. புத்தகப் பொருளடக்கத்தின் தேவையான பகுதிகளை மட்டும் தகுந்த நேரத்தில் வாசிப்புப் பொருளாகப் பாலர் பயன்படுத்துகின்றனர்.

ஆதாரப்பள்ளிக்கான புத்தகங்களை எழுதுவதற்குத் தகுதிவாய்ந்தவர் யார்? ஆதாரப்பள்ளி ஆசிரியரா? அல்லது பாலர் புத்தகம் எழுதவல்ல அனுபவம் வாய்ந்த புத்தகாசிரியரா? ஆதாரப்பள்ளிக்குப் பொருத்தமான புத்தகங்களை எழுதும் பொறுப்பு ஆதாரப்பள்ளி ஆசிரியரைச் சார்ந்தது என்று ஆதாரக் கல்வித் தத்துவங்கள் சுட்டிக் காட்டுகின்றன. ஒவ்வொரு வகுப்பாசிரியரும் தன் வகுப்பிற்குத் தேவையான புத்தகங்களை எழுதும் ஆற்றல் படைத்த ஓர் புத்தகாசிரியராகவும் விளங்கவேண்டும் என்பது கருத்து. இது எந்த அளவிற்குச் சாத்தியம் என்று நடைமுறையில் விளங்கும். ஆதாரப்பள்ளி ஆசிரியர் ஒருவர் எத்துணை போதனைத் திறமை பெற்றிருப்பினும், பாலருக்கேற்ற புத்தகம் எழுதுவதற்கான அறிவும் திறமையும் பெற்றவராகவுமிருப்பார் என்று சொல்லுவதற்கில்லை. இதுபோல், சிறுவர்க்கான புத்தகம் எழுதும் வன்மை வாய்ந்த புத்தகாசிரியர் ஒருவர் ஆதாரக் கல்வித் தத்துவங்கள், பாடப்பொருள் இணைப்புமுறை இவைபற்றிய அறிவு இன்மையால் ஆதாரப்பள்ளிக்குப் பொருத்தமான புத்தகங்கள் எழுத முடியாமல் இருக்கலாம். ஆகவே, ஆதாரக் கல்விக் கொத்தமுறையில், ஆதாரப்பள்ளிக்குப் பொருத்தமான புத்தகம் எழுதுவது யார்? என்ற பிரச்சினை எழுகின்றது. ஆதாரப் பள்ளி அன்றாட அலுவல்களைப் பற்றிய புகைப்படங்கள் பிடிக்கவேண்டுமானால், ஆதாரப்பள்ளி ஆசிரியர், புகைப்படமெடுப்பவர் இவர்களில் திறமையும் தகுதியும் வாய்ந்தவர் யார்? ஆதாரக்கல்வி ஆசிரியர் ஒருவர் புகைப்படமெடுக்கக் கற்றுக்கொண்டு பின்னர் எடுக்கும் புகைப்படங்களைக் காட்டிலும், புகைப்படமெடுப்பதை வாழ்க்கைத் தொழிலாகக்கொண்ட புகைப்படமெடுக்கும் ஒருவர் ஆதாரப் பள்ளித் தத்துவங்கள், நடைமுறை இவற்றை கற்றறிந்துகொண்ட பின்னர் அவர் பிடிக்கும் புகைப்படங்கள் மேம்பட்டதாகவிருக்கும் என்பது தெளிவு. மேலும் மேற்கூறிய பணியில், ஆசிரியர் புகைப்படமெடுப்பவர் இவ்விருவரின் கூட்டுச் செயல் மிக மிகச் சிறந்த முறையில் அமையும் என்பது திண்ணம். ஆதாரப் பள்ளிக்கான புத்தகங்களை எழுதும் பொறுப்பை, பாலர் புத்தகம் எழுதுவதில் அனுபவமும் திறமையும் வாய்ந்த புத்தகாசிரியர்கள் ஏற்றுக்கொள்வது நன்முறையில் பயன்தரும். மேலும், இத்துறையில் ஆதாரப்பள்ளி ஆசிரியர், புத்தகாசிரியர் இவ்விருவரின் கூட்டு முயற்சி விரும்பத்தக்கது.

நமது மத்திய அரசாங்கத்தின் கல்வி இலாகா, அண்மையில் பாடப்புத்தக ஆராய்ச்சி (Text Book Research) நடைபெறுவதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்திருக்கின்றது. இவ்வாராய்ச்சியில் ஆதாரப்பள்ளிக்கான புத்தகங்களுக்குச் சிறப்பான இடமளிக்கப்பட வேண்டும். ஆதாரக் கல்வியில் புத்தகத்தின் இடம், ஆதாரப்பள்ளிக்குப் பொருத்தமான புத்தகம், இப்புத்தகத்தின் அமைப்பு, இப்புத்தகம் எழுதுவது யார்? என்பன போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கானத் திட்டமான கொள்கைகளை வகுக்க ஆராய்ச்சிகள் நடைபெறவேண்டும். இவ்வாராய்ச்சிகளின் விளைவாகக் கிடைக்கப்பெறும் உண்மைகளை அடிப்படையாகக்கொண்டு 'ஆதாரப் பள்ளிக்குப் பொருத்தமான புத்தகங்களை எழுதும் முறை' (Writing books for Basic Schools) என்பது போன்ற வழிகாட்டிப் புத்தகங்களை வெளியிடலாம். 'புதிதாகப் படிக்கக் கற்றுக்கொண்டவருக்குப் புத்தகம் எழுதும் முறை' (Writing books for Neo-literates) என்ற முதியோர் கல்வி சம்பந்தமான புத்தகமொன்றை அண்மையில் மத்திய கல்வி இலாகா வெளியிட்டார்கள். மேற்கூறியபடி, இதுபோன்ற ஆதாரக் கல்வி சம்பந்தமான புத்தகங்களையும் வெளி

யிட்டால், இவை ஆதாரப்பள்ளிக்குப் பொருத்தமான புத்தகங்களை வெளியிடவிருக்கும் புத்தகாசிரியர்களுக்குப் பெரிதும் துணை நிற்கும்.

'பாலர் கல்வி ஓர் கைத்தொழில் மூலம் மாத்திரமே நடைபெறவேண்டும். பாலர்கள் புத்தகங்களைப் பயன்படுத்துவது அவசியமேயில்லை என்று ஆதாரக் கல்வி வற்புறுத்துகின்றது' என்று ஆதாரக் கல்வியைத் தூற்றுகின்றவர்களும், குறைகூறுபவர்களும் பறைசாற்றுகின்றனர். இது உண்மை அல்ல. புத்தகத்தைப் புறக்கணித்து, தொழில் மூலம் மாத்திரம் கல்வி நடைபெறவேண்டும் என்று ஆதாரக் கல்வி வற்புறுத்துகிறது என்பது உண்மையானல், மைசூர் முன்னாள் திவான் மேதை மிர்சா இஸ்மேல் கூறியபடி 'ஆதாரக் கல்வி முறையானது நாகரீகத்தினின்றும் பின்வாங்குவதாகும் ('Basic Education is a retreat from Civilisation'*). ஆனல் ஆதாரக் கல்வி முறையோ. இன்றைய உலகத்தின் நாகரிகம், முன்னேற்றம் இவற்றிற்கு அடிப்படையாகவுள்ள ஜனநாயகக் கல்வி முறைகளில் தலைசிறந்து விளங்குகின்றது. கல்வி உலகிலே, சிறப்பாகப் பாலர் கல்வியிலே இவை ஓர் முக்கிய ஆராய்ச்சி நடைபெறுவதற்கு ஆதாரக் கல்வி இடமளித்து வருகின்றது. ஆதாரக் கல்வித் துறையிலுள்ள கல்வியாளர் கற்றல் முறையிலே சிறப்பான பரிசோதனை ஒன்றை நடத்தி வருகின்றனர். வாழ்க்கைச் செயல்களில் ஈடுபடுவதன் மூலம் கற்றல் (Learning through life activities) புத்தகத்தின் மூலம் கற்றல் (Learning through books) என்ற இவ்விரண்டு சிறப்பான கற்றல் முறைகளில் ஓர் தகுதியான விகிதம், ஓர் பொருத்தமான அளவு இவற்றை நிர்ணயம் செய்வதில் ஆதாரக் கல்வித் துறையிலுள்ள கல்வியாளர் முனைந்திருக்கிருர்கள். ஆதாரக் கல்வித் துறையிலுள்ளோர் ஆற்றிவரும் இவ்வருந்தொண்டிற்காக கல்வியாளர்கள், கல்வித்துறைக்குப் புறம்பாகவுள்ளோர், ஏன், மக்கள் அனைவருமே ஆதாரக் கல்வித் துறையிலுள்ளோருக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிருர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



28-11-1954 அன்று, வாலாஜாபாத் இந்துமத பாடசாலை ஸையன்ஸ் பிளாக்கை கல்வி இலாகா டைரக்டர் ஸ்ரீ என். டி. சுந்தரவடிவேலு திறந்து வைக்கிருர்.

---

*அண்மையில் நடந்த பூனா சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் தலைமை வகித்த மிர்சா இஸ்மேல் தமது உரையில் ஆதாரக் கல்வியைக் குறிப்பிட்டு 'ஆதாரக் கல்விமுறை நாகரீகத்தினின்றும் பின்வாங்குவதாகும்' என்று கூறியிருக்கிருர்.

செய்தித் திரட்டு

(1) ஈரோடு

3-11-54ல் ஈரோடு தாலூக்கா ஆரம்ப ஆசிரியர்களின் சம்மேளனக் கூட்டமானது இளஞர் கல்வி நிலயக் கட்டிடத்தில் தமிழ் நாடு முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் சம்மேளன காரியதரிசி திருவாளர் K. K. நல்லதம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :

1. அகில இந்திய ரீதியில் ஆரம்பக் கல்வியைப் புதுப்பித்தல்.

2. அகில இந்திய ஆரம்பக் கல்வி ஆசிரியரின் நிலயை உயர்த்துவது.

மேலே உள்ள தீர்மானங்களை 60-வது அ. இ. கா. மகாசபையானது சர்க்காருக்கு சிபார்சு செய்யும்படி இச்சம்மேளனம் கேட்டுக்கொள்ளுகிறது.

ஒவ்வொரு மாகாண சங்கங்களும், மேலே உள்ள தீர்மானங்களை தங்கள் சங்கங்களின் மூலம் 60-வது அ. இ. கா. மகா சபைக்கு அனுப்புமாறு இச்சம்மேளனம் கேட்டுக்கொள்ளுகிறது.

3. இக்கூட்ட நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு அனுப்பிவைக்க திருவாளர் E. N. சுப்பிரமணியன், M. ஜீவரத்தினம், (ஜி. போ. ஆ. ச. தலைவர்) ஆகிய இருவருக்கும் இக்கூட்டம் அதிகாரம் அளிக்கிறது

பின் திரு. E. N. சுப்பிரமணியன் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

(2) ஏரையூர்

6-11-54ல் செங்கம் தாலூக்கா, ஏரையூர் ஆசிரியர் சங்கக் கூட்டம் திரு. ராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. கடவுள் வணக்கம் திரு. M. பண்டரி அவர்களால் பாடப்பட்டது. பாடம், செய்யுள் உச்சிமலை குப்பம் தலைமை ஆசிரியர் திரு. சந்திரசேகரன் அவர்களால் பிள்ளைகளுக்கு விளக்கிக் காட்டப்பட்டது. வியாசம், ஆதாரக் கல்வி என்பவைபற்றி திரு. நாகப்பன் அவர்களால் விளக்கிக் கூறப்பட்டது. தேசீய கீதம் திரு. பாண்டுரங்கன் அவர்களால் பாடப்படடு, கூட்டம் இனிது முடிந்தது.

(3) திண்டிவனம்

6-11-54ல் திண்டிவனம் மேற்கு ஆசிரியர் சங்கக் கூட்டம் சீனியர் டெபுடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் T. S. இராமசந்திரன், B. A., B. T. அவர்கள் தலைமையில் தொடங்கியது. அவ்வமயம் உதவி கல்வி கண்காணிப்பாளர் ஸ்ரீமான் L. S. அரங்கசாமி அவர்களும் கூட்டத்திற்கு வந்திருந்து சிறப்பித்தார்கள். ஸ்ரீமான் S. சுப்ரமணிய ஐயர் அவர்களால் பாடப்பட்ட இறைவணக்கத்துக்குப்பின் சென்ற கூட்ட அறிக்கையும், செய்திச் சுருக்கமும் வாசிக்கப்பட்டன. திண்டிவனம் குஷால்சந்த் பாடசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் S. சுப்ரமணிய ஐயர் அவர்கள் 5ம் வகுப்பு மாணவர்களுக்குச் "செய்யுள் மாதிரி பாடபோதனை," "செல்லாரும் பொழில் புடைசூழ்" எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்துப் பாடலை நடத்திக் காட்டினார்.

"மாணவர்களின் மனதைக் கவரத்தக்க முறையிலும், அச்செய்யுளில் வரும் ஒவ்வொரு சம்பவத்தையும் விளக்கப் படங்கள் மூலம் விவரித்தும் போதித்தது செய்யுள் பாட போதனையிலேயே புரட்சித் தன்மையையும், புதுமைக் கருத்தையும், புத்துணர்ச்சியையும் ஊட்டுவதாய் அமைந்திருந்தது," என்றும், "செய்யுளைக் கருத்துணர போதிப்பதால் மனப்பாடம் செய்வதில் மாணவர்கள் தனிக் கவனம் செலுத்தவேண்டிய அவசியமில்லை என்பதைப் பாடமுடிவில் மாணவர்கள் அச்செய்யுளைப் பாராமல் பாடியதிலிருந்து அறிகிறோம்," என்றும் தலைவர் வெகுவாகப் பாராட்டினார். சுருங்கக்கூறின் பாடபோதனையைப்பற்றி சொற்சித்திரங்களால் வர்ணிப்பதைக் காட்டிலும் இவ்வாறு செயல்மூலம் சிறப்பாகப் போதிப்பது எவ்வளவோ நலம் பயக்கும் என தலைவர் தமது முடிவுரையில் கூறினார். பின் ஷை பாடசாலை ஆசிரியை ஸ்ரீமதி ஞானப்பிரகாசம் அவர்கள் திருக்குறளில் "செய்நன்றியறிதல்" அதிகாரம் பற்றியும் ஸ்ரீ R. G. தங்கவேலு அவர்கள் "பெற்றோர் சங்கமும் அதன் பயனும்" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் தேசீய கீதத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

(4) கண்டனூர்

6-11-54ல் கண்டனூர் வட்டார ஆரம்ப ஆசிரியர் யூனியனின் கூட்டம் அதன் தலைவர் ஸ்ரீ M. A. சுப்பையரவர்கள் தலைமையில் கூடியது. காரியதரிசி ஸ்ரீ ஏ. ராமச்சந்திர ராவ் அவர்களால் சென்ற கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பு வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீமான்கள் V. சாம்பசிவ ஐயர், S. கிருஷ்ணய்யர், M. சுப்பிரமணிய பிள்ளை, S. நாகராஜன், ஸ்ரீமதி S. அலங்காரவல்லி ஆகியவர்கள் கமிட்டி மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த யூனியன் இராமநாதபுரம் ஜில்லா ஆசிரியர் கில்டுடன் இணைக்கப்பட்ட விபரம் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. ஷ கில்டின் உப தலைவர் ஸ்ரீ டி. செபெஸ்டியன் அவர்களிடமிருந்து வந்த கடிதம் படிக்கப்பட்டு இந்த யூனியனையும் இதன் மூலம் ஜில்லா ஆசிரியர் கில்டையும் பலப்படுத்த எல்லா ஆசிரியர்களும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் தலைவராலும் காரியதரிசியாலும் கேட்டுக்கொள்ளப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

(5) தென்னிலை

13-11-54ல் கரூர் தாலூக்கா தென்னிலை வட்ட ஆசிரியர் சங்க ஆண்டு விழா ஸ்ரீ N. செல்லம், M. A., B. T., கரூர் கல்வி கண்காணிப்பாளர், தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் செயலாளர் திரு. வி. கிருஷ்ணசாமி யாவரையும் வரவேற்றார். திரு. ரங்கராஜன் இறைவணக்கத்தை இன்னிசையுடன் பாடினார்.

தலைவர் முன்னுரையில் ஆசிரிய சங்கத்தின் நோக்கம், ஆசிரியர்களின் தொழில் முன்னேற்றம், மொழி அறிவு வளர்ச்சி பெறும் விதம், என்ற கருத்துக்கள் பொதிய பேசினார்கள்.

செயலாளர் திரு. வி. கிருஷ்ணசாமி, ஆண்டு அறிக்கை, சங்க அறிக்கை, வரவு செலவு கணக்குகள் வாசித்தார். யாவராலும் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

திரு. இராமராசன், தமிழாசிரியர், சேலம், வேலூர் கந்தசாமிக் கண்டர் உயர்நிலைப்பள்ளி, அவர்கள் "தமிழ்ச் செல்வம்" என்ற தலைப்பில் சிலப்பதிகாரத்தின் சிறப்புப்பற்றியும் அதனை ஆக்கியோனாகிய இளங்கோ அடிகளின் கவித்திறமையையும் எடுத்துக்காட்டினார். கற்புக்கரசி கண்ணகி பாண்டிய மன்னனின் அவையில் தன் தலைவன் கோவலன் கள்ளன் அல்லன் என்று கூறிய இடம் யாவரையும் மெய்மறந்து கொள்ளும்படியும், கண்களில் நீர் வழியும்படியும் செய்து விட்டார் அவருடைய சொற்பொழிவினால். கண்ணகியின் சோகம், வீரம், அழுகை தத்ரூபமாக விளக்கிய போது சொற்பொழிவாளரே சோகக் கண்ணீர் விட்டார் என்றால் சொற்பொழிவின் தன்மை யாவராலும் பாராட்டப்பட்டது.

பின்பு திரு. N. A. குஞ்சிதபாதம், இளந்துணை ஆய்வாளர், கரூர், "ஆசிரியரும் ஆசிரியர் சங்கமும்" என்பதைப்பற்றி சிறந்த முறையில் சொற்பொழிவாற்றினார்.

தலைவர் பின்னுரையில் தமிழ்ச் சிறப்புத் தன்மை கல்லையும் உருகச் செய்யும் தன்மை உடையது என்பதற்கு எடுத்துக்காட்டாக திரு. ராமராசனின் சொற்பொழிவு ஒன்றே சான்றாகும் என்று திரு. ராமராசன் அவர்களைப் பாராட்டியும் ஆசிரியர்கள் சிலப்பதிகாரம் போன்ற நூல்களை கற்றறிந்து மேன்மை அடைய வேண்டும் என்றும் கூறி முடித்தார்.

ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட தேநீர் விருந்திலும், புகைப்பட எடுப்பிலும் கலந்து கொண்டனர்.

மாலை 5-45க்கு யாவர்க்கும் உதவி செயலாளர் J. துரைராஜ் நன்றிகூற நாட்டு வணக்கத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

(6) வாலாஜாபாத்

28-11-54ல் சென்னை மாகாணத்தின் உள்ளாட்சி நகராட்சிக் கழகங்களின் தலைவர் உயர்திரு. ஜெ. சிவானந்தம், ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமையில் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையைச் சேர்ந்த தொழிற்சாலையில் புதுக் குடிசைத் தொழில்கள் சில தொடங்கப்பெற்றன.

சென்னை மாகாணத்தின் கல்வித் துறைத் தலைவர் டைரக்டர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு, எம். ஏ. எல். டி., அவர்கள் பாடசாலையில் அமைந்துள்ள அறிவியல் விந்தை சாலையை முதலில் திறந்து வைத்தார்கள். திறந்துவைக்கையில்பாடசாலையின் அமைப்பையும் நடை முறைகளையும் பாராட்டிப்

பேசி மாணவர்கள் முயற்சியுடனும் நல்ல பண்புகளுடனும் வளர வேண்டுமென்றும், ஒன்றே குலம் என்றும், தமிழ் மறையை என்றும் செயலில் கொண்டிருந்தால் அவர்கள் வெற்றி பெறுவது உறுதியென்றும் கூறினார்.

செங்கற்பட்டு மாவட்டத்தின் கூட்டுறவுத் துறைத் தலைவர் இளமையிலேயே பழக்கப் பெறுவதன் நன்மையை விளக்கிக் கூறி அலுமினியத் தொழிற் பகுதியைத் தொடங்கி வைத்தார்.

மதுரை மண்டலக் கல்வித் துறைத் தலைவர் திரு. ஆர். கோபாலையர் அவர்கள் முதலில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

இந்துமத பாடசாலைக்கு பலவகையிலும் உதவிபுரிந்து வருகின்றவரும் சென்னை ஸ்பிரிட்வேர் ஹவுஸ் முழு உரிமையாளருமான திரு. எஸ். பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் மாணவரில்லத்திற்காக மாவு முதலிய அறைக்கும் பகுதியைத் திறந்து வைத்தார்.

சென்னை மாகாண அரசாங்கத்தின் கூட்டுத் துறையின் துணைச் செயலாளர் திரு. கா. து. நடராஜன், எம். ஏ., பி. எல்., அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரை கூறினார். பழமையில் கழியவேண்டுவனவற்றை கழித்துப் புதுமையில் கொள்ளவேண்டுவனவற்றைக்கொண்டு பெரியோர்கள் துணையுடன் சிறக்கவேண்டுமெனக் கூறினார்.

தலைவர் அவர்கள் பேசுகையில் குழந்தைகள் நிறைந்த இக்குருகுலம் கடவுள் சந்நதியாகவே விளங்குகிறது என்றும் இது நமது மாகாணத்திற்கே ஒரு அணிகலம் என்றும் இதைப் போன்று பல நிலையங்கள் நமது மாகாணத்தில் நிறுவப்படவேண்டுமென்றும் கூறினார்.

இந்துமத பாடசாலையின் பழைய மாணவரும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியருமான திரு. அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்., அவர்களும், பாடசாலைச் செயலாளர் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களும் யாவருக்கும் நன்றிகூற விழா இனிது நிறைவேறியது.

(7) சைதாப்பேட்டை

28-11-54ல் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில், உயர்திரு. R. கோவிந்தராசலு நாயுடு அவர்களை ஜில்லா போர்டு தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பதைப் பாராட்ட உயர்திரு. T. புருஷோத்தமம், M. L. C., அவர்கள் தலைமையில் செங்கற்பட்டு ஜில்லா ஆ. ஆ. யூனியன் பிரதிநிதிகளின் ஒரு சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. அதுகாலை செங்கற்பட்டு மாவட்டக் கழக உறுப்பினர்கள் பலரும், ஆசிரியர்பால் பரிவுகொண்ட சில சட்டசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். யூனியன் தலைவரும் முன்னாள் சட்டசபை உறுப்பினருமான உயர்திரு. S. K. கோவிந்தராசலு நாயகர் அவர்கள் மாவட்டக் கழகத் தலைவர் உயர்திரு. R. கோவிந்தராசலு நாயுடு அவர்களுக்கு பாராட்டுப் பத்திரம் ஒன்று வாசித்தளித்தார். பின்னர், யூனியன் உபதலைவர் திரு. A. இராதாகிருஷ்ணன் அவர்கள் அண்மையில் தேர்தல் நடந்து புதிதாக மக்களாட்சி நடப்பதற்கு முன் தனி அதிகாரி காலத்தில் கொடுத்த வாக்குறுதியை கவனப்படுத்தவும் அவைகளைப் பூர்த்தி செய்விக்குமாறும் பிரார்த்தித்து ஜில்லா போர்டு தலைவர் அவர்கள் கவனத்திற்கும் ஆதரவிற்கும் மிமொராண்டம் ஒன்று வாசித்துக்கொடுத்தார்.

கழகத்தலைவர் திரு. R. கோவிந்தராசலு நாயுடு அவர்கள் தன்னைப் பாராட்டின அனைவருக்கும் நன்றி செலுத்தி ஆசிரியர்கள் கோரிக்கைகளை அவசியம் கவனிப்பதாகவும் ஆசிரியர்கள் இந்த மாவட்டத்திற்கு நல்ல பெயரைத் தேடித் தருமாறும் கேட்டுக்கொண்டார். கடைசியாக T. புருஷோத்தமம், M. L. C. அவர்கள் மிமொராண்டத்தில் குறிப்பிட்டுள்ளவைகள் சாதாரணமாகச் செய்யக்கூடியவைகளே என்றும் அவைகளைக் கவனித்து ஆசிரியர்களுக்கு உதவுமாறு தலைவர் அவர்களையும், கழக உறுப்பினர்களையும் கேட்டுக்கொண்டார். ஆசிரியர் கௌரவத்தை உத்தேசித்து ராஜ பவனத்து அழைப்புகளில் ஆசிரியர்களுக்கும் அனுப்ப ஏற்பாடு செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

முடிவாக செயலாளர் திரு. C. பாலசுப்பிரமணியம் அவர்களால் மிமொராண்டத்தில் குறிப்பிட்டவைகள் விளக்கப்பெற்று வந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டு பிறகு எல்லோருக்கும் தேநீர் உபசரிப்பு நடத்தப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

(8) ஈரோடு

28-11-54ல் ஈரோடு வள்ளலார் கல்வி நிலயத்தில் ஈரோடு தாலுக்கா எயிடெட்

எலிமெண்டரி ஸ்கூல்ஆசிரியர் யூனியன் மகா சபைக் கூட்டம் ஞானிபாளையம் வள்ளுவர் உயர்தர ஆரம்பப்பள்ளி மானேஜர் திரு. M. A. பெரியசாமிக் கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. ஷை பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. சுப்பிரமணியம் கடவுள் வாழ்த்துப் பாடினர்.

தலைவர் முன்னுரையில் இது மாதிரித் தாலூக்காவில் ஒரு யூனியன் இருப்பது எயிடெட் ஆசிரியர்களின் நலனுக்காகவே என்றும், சங்கத்தைப் பலப்படுத்த எல்லோரும் அங்கத்தினராக வேண்டும் என்றும், "தங்கத்தால் ஆகாதது சங்கத்தால் ஆகும்" என்றும் கூறி முடித்தபின் காரியதரிசி ரிப்போர்ட் வாசிக்கப்பட்டு நிறைவேறியது.

பின்னர் மதராஸா இஸ்லாமியா ஆரம்பப்பள்ளி ஆசிரியர் திரு. M. ஞான மாணிக்கம் அவர்கள் "எயிடெட் ஆசிரியரும் சட்டதிட்டமும்" என்பது பற்றிப் பேசினர். புதிய தலைவராக திரு. M. ஞான மாணிக்கம் அவர்களை மகாசபை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தது. பின்பு பிராவிடெண்டு பண்டு, வீட்டு வாடகை, சம்பள பட்டுவாடா முதலிய விஷயங்கள் பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின் காரியதரிசி E. N. சுப்பிரமணியன் நன்றி கூற தேச வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

(9) லெட்சுமிபுரம்

30-11-54ல், இலக்குமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலையில் ஸ்ரீ மீனாட்சி சங்கக் கூட்டம் வித்தியாசாலை உதவி ஆசிரியர் திரு. S. ராமனுதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இறை வணக்கத்திற்குப் பின் சொ. வி. மாணவ மாணவிகளின் பாட்டு, பேச்சு, நடிப்பு, கும்மி, கோலாட்டங்கள் நடைபெற்றன.

(10) வேட்டவலம்

20-11-54ல் வேட்டவலம் சென்டர், ஆரம்ப ஆசிரியர் சங்க ஆண்டு விழா திருவண்ணாமலை வட்ட கண்காணிப்பாளர் உயர்திரு. K. புருஷோத்தமன் அவர்களின் தலைமையில் ஆரம்பமாயிற்று. செயலாளர் எல்லோரையும் வரவேற்றபின் திரு. A. குசை அவர்களால் இறை வணக்கம் பாடப்பட்டது. ஆண்டு அறிக்கை செயலாளரால் வாசிக்கப்பட்டது. தலைவர் முன்னுரைக்குப் பின் ஷை வட்ட உதவி கண்காணிப்பாளர் திரு. A. கோபாலகிருஷ்ணன் அவர்கள் "நம் பணி" என்பது பற்றியும், இவ்வூர் உயர்நிலைப்பள்ளி தலைமைத் தமிழ் ஆசிரியர் திரு. இராஜகோபாலன் அவர்கள் "தமிழ் இன்பம்" என்பது பற்றியும் பேசினர்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் D. மங்களநாதன் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு நாட்டு வணக்கத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

பொங்கல் விழாவின் பொன்மலர் வாழ்த்திதழ்

ஜெய - தை - க. (1955)

(மாயூரம், கோ. ப. வேலன், எரிசினம்பட்டி)

அடிமை நாட்டினைத் துடித்தெழச் செய்து
விடுதலை வேட்கை வியப்புடன் பரவ
அன்புப் பணியை அறப்பணி யாக
உண்மையே மக்கள் வாழ்வின் ஒளியென
பலதுறைப் பணியால் பாரினுக் குதவி
வழிதனை வகுத்து இழிவதைப் போக்கி
இந்திய நாட்டை இன்புறச் செய்த
காந்தி பிறந்த பாரத நாட்டில்
எங்கும் பசுமையும் தங்கமும் பொலிய
ஓங்கி உயர்ந்த உன்னத மலைகளின்
அயரா தோடும் ஆறுகள் மலிந்து

துயரது போக்கும் எழில்பல நிறைந்த
கண்ணிற் கினிய கவினுறு காட்சிகள்
வண்ணப் படமென எண்ணக் குவிப்பே
என்றும் மங்கா தினிதே யளிக்க
ஏற்றம் மிக்க இந்திய நாட்டில்
கற்பும் காதலும் கல்வியும் ஒழுக்கமும்
பொற்பெனக் கொண்ட மக்கள் வாழ்வின்
கண்ணெனக் கருதும் தென்னா டதனில்
வஞ்ச மிலாத தீஞ்சுவைத் தமிழர்
துஞ்சல் ஒழித்து துயரது போக்க
ஏரது கொண்டு பாரது செழிக்க
என்றும் நன்றென உழைத்தே வாழும்
உழவர் வாழ்வை உயர்த்தும் நாளாய்
உழைப்பிற் குதவும் உயிர்களைப் போற்றி
உழைப்பின் பயனை உலகிற் களிக்க
உளம்நிறை அன்புடன் உவந்தே களிக்க
தாரதை நோக்கிக் களிக்கும் கலாபி
இருளதைப் போக்கி அருளது நல்கும்
இளவே னிலையே இன்பமாய்க் கொண்டு
கூவும் குயிலொலி குழகுதல் நிறைந்து
மழலை மொழியும் கிள்ளைகள் மலிந்து
சங்கம் முழங்கி சங்கடம் தவிர்க்க
வந்தபொன் நாளே வளமிகு நாளாய்
பொங்கல் எனவே போற்றிப் புகழ்ந்து
பாலதிற் பொங்கலைப் பாங்காய்ப் பொங்கி
தேனுடன் தினைமா கலந்து பிசைந்து
கன்னலும் கதலியும் செந்நெலும் படைத்து
உற்றார் ஊரார் ஒன்றாய் கூடி
உலகம் உய்ய ஒளிதனை நல்கும்
என்றூழ் ஏற்றி இன்புறப் பணிந்து
பொங்கிய பொங்கலைப் பாங்காய் உண்டு
எங்குமே சங்கடம் என்றுமே இலாது
புங்கமாய் வந்த பொங்கல்நன் நாள்முதல்
ஆற்றும் கடனை அறிவுடன் ஆற்றி
அறன்வழி நின்று அன்பு பரப்பி
போற்றிப் போற்றிப் புதுவாழ் வுறவில்
வள்ளுவன் வாய்மொழி தெள்ளமு தெனவே
கொள்ளுக என்றும் குவலயம் ஓங்க
இன்பம் கண்டு என்றும் வாழி !
வாழி ! வாழி !! வாழிய வளமுடன் !!!

குறிப்பு :—கலாபி : மயில் ; குழகுதல் : கொஞ்சி விளையாடுதல் ; வசீகரித்தல். புங்கம் : சிறப்பு ;
என்றூழ் : பரிதி (சூரியன்)

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

1954 நவம்பர் மாதத்திய நாட்குறிப்புக்கள்

1-11-54 : பாலர் கல்வி—செப்டம்பர் 1954—பிரசுரம்.

13-11-54 : அசாதாரண மகாநாட்டைப்பற்றிய சுற்றறிக்கை எல்லா ஆசிரிய சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டது.

சங்கத் தலைவர் வட ஆற்காடு ஜில்லா கில்டு மகாநாட்டில் கலந்துகொண்டு பேசினார்.

24-11-54 : தென்னிந்திய ஆசிரியன்—அக்டோபர் 1954—பிரசுரம்.

25-11-54 : அசாதாரண மகாநாட்டிற்கு சப் கமிட்டிகள் நிறுவப்பட்டன.

26-11-54 : பத்திரிகை காரியதரிசி ஸ்ரீ C. ரங்கநாத அய்யங்கார் பிரசார விஷயமாக மதுரை ஜில்லாவிற்குச் சென்றார்.

தமிழ் உபபாட புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்திற்கேற்ப எழுதியவை

இப்புத்தகங்கள் நமது பள்ளிமாணவர், மாணவிகளின் ஆர்வத்தை ஊட்டும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன. பல படங்கள் உள்ளன.

தேச பக்த மாலை

வித்வான் எம். சண்முகம் பிள்ளை
எழுதியது
எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
அவர்களின் முகவுரையுடன் கூடியது

	அணா		அணா
1. மகாத்மா காந்தி	10	4. கவியரசி சரோஜினி	8
2. கவியரசர் தாகூர்	8	5. தேசீய கவிமணிகள் (பாரதியார், தாகூர், சரோஜினியார்)	12
3. தேசிய கவி பாரதியார்	8		

எம். அனந்த நாராயணன், பி. ஏ., எல். டி.
எழுதியவை

6. வீர சிவாஜி அணா 10   7. சுவாமி விவேகானந்தர் அணா 12

பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

Regd. No. M. 3473

THE

S. I. T. U. PROTECTION FUND LTD.

520, HIGH ROAD, TRIPLICANE, MADRAS-5

(Registered under the Insurance Act as a Mutual Insurance Co.)

Total Assets Exceed 12,00,000

No. of Policy-holders over 4500

Please remember that this is your own Insurance Society and that its members form, as it were, a co-operative group to enable one another mutually to make provision for their old age and their families.

There are five tables for 10, 15, 20, 25 and 30 years.

Teachers may take ONE to SIX units according to their ages.

One unit guarantees a benefit of Rs. 250/-, which goes on increasing by Rupees Five after every year of membership.

You will not find a cheaper Insurance Cover.

By taking a Policy in the Protection Fund, you strengthen the teachers' organisation and at the same time make provision for your old age and family.

For particulars write to :

THE SECRETARY.

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press, Ltd., 109-C, Mount Road. Madras-18. Edited & Published by Sri S. Natarajan, for "The South India Teachers' Union," at 520, High Road, Triplicane, Madras-5.